யில் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளித்து அனுப்பப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவை துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

3. ஒழுங்குப் பிரச்சினை

ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றியசுற்றறிக்கை குறித்து

*திரு. க. அன்பழகன்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, தங்கள் அனுமதி பெற்று ஒரு விளக்கத்தைத் தங்களிடத்தில் பெறவிரும்புகிறேன். நான் சொல்வது தவறாக இருக்குமானால் தாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தேவை இல்லை. நேற்றைய தினம் இந்த அவையில் கேள்வி நேரத்திற்குப் பிறகு உரிமைப்பிரச்சினைகள் முதலிய பிரச்சினைகள் வரும்பொழுது, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும்பொழுது இந்த அவை 9 மணிக்குத் தொடங்குவதால் எட்டரை மணிக்கு முன்னதாகத் தர வேண்டுமென்பதாகச் சில விதிமுறைகளை நேற்றைய தினம் தாங்கள் படித்தீர்கள். அதைப்பற்றி எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் பல கருத்துக்களைத் தங்களிடத்தில் சொன்னோம். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் சொன்னார்கள். மறுபடியும் நேற்று இரவு தாங்கள் முதலிலே படித்த அந்த அறிக்கை அப்படியே அனுப்பப்பட்டிருக்கிறது. ஏதேனும் மாற்றம் இருக்கிறதா ? முதலிலே சொன்ன அறிக்கையிலே மாற்றம் இல்லாமல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தாங்கள் நேற்றைய தினம் அனுப்பியிருக்கின்ற சுற்றறிக்கையானது நமது விதிமுறைகளுக்கு முரண்பட்டதாகக் காணப்படுகிறது. காரணம் ரூல் 242-ன் கீழ் நீங்கள் நேற்றைய தினம் அனுப்பியிருக்கின்ற சுற்றறிக்கையானது அனுப்பப்பட்டிருக்கிறது. விதி 242-ஐ நான் படிக்கிறேன்.

"All matters not specially provided for in these rules and all questions relating to the detailed working of these rules unless shall be regulated in such manner as the Speaker may from time to time direct."

இங்கே,

"All matters not specially provided for in these rules.... "

அதாவது ஒத்திவைப்புத் தீர்மானமானது ரூல் 42-ன்கீழ் வருகிறது. ரூல் 42-ல் தெளிவாக எந்த நோட்டீஸ், எந்த மோஷன் கொடுக்க வேண்டும், யாரிடம் கொடுக்க வேண்டும், எப்பொழுது கொடுக்கவேண்டும் என்று ஒழுங்காகக் கூறப்பட்டிருக்கிறது.

It has been stated in clear and unambiguous terms. I will read Rules 42 and 43 also.

Rule 42 : A motion for an adjournment of the business of the Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance may be made in accordance with the rules in this Chapter.

1977 ஜூலை 29] [திரு. ஜே. ஜேம்ஸ்]

Rule 43 reads as follows :—

Rule 43 : A member desirous of moving a motion for an adjournment of the business of the House for the purpose of discussing a definite matter of urgent public importance shall, before the commencement of the sitting of the Assembly at which he proposes to ask for leave of the House to make his motion, hand to the Secretary three copies of a statement in writing of the matter proposed to be discussed and obtain the Speaker's consent to his asking for leave to make the motion.

தலைவரவர்களே, இங்கு 42-வது விதியின்கீழ் ஒரு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றால் 43-வது விதியின்படி என்றைக்கு நாம் அந்த நோட்டீஸைக் கொடுக்கிறோமோ அன்றைக்கு சட்டசபை கூடுவதற்கு முன்னதாக அதில் 8-30 என்று புரொவிஷன் இல்லை. ஆனால் நீங்கள் கொடுத்திருக்கின்ற சுற்றறிக்கையில், A Notice of Motion should be handed over to the Speaker by 8.30 a.m. என்று இருக்கிறது. அதாவது உங்கள் சுற்றறிக்கையில், "உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி முன் அறிவிப்பை காலை 8-30 மணிக்குள்ளாக பேரவைத் தலைவர் அவர்களுக்கும், செயலாளருக்கும் கொடுக்க வேண்டும்." என்றிருக்கிறது. There is no provision in the rules. It has been stated specifically in Rule 43, that"........before the commencement of the sitting of the Assembly at which he proposed to ask for leave of the House to make his motion, hand to the Secretary three copies of a statement in writing of the matter proposed to be discussed....". But now it has been stated that the copies had to be handed over to the Speaker and to the concerned Minister. Such a responsibility was not fixed as per Rule 43. A Member cannot be asked to hand over the notice of Motion to the Minister.

அவ்வாறே சம்பந்தப்பட்ட அமைச்சருக்குக் காலை 8 1/2 மணிக்குள் சேர்ப்பது உறுப்பினருடைய பொறுப்பு. இதுவரை பேரவைத் துறையில் கொடுத்தால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்து புரிந்தாகிவிட்டது. விளக்கிவிட்டீர்கள். சொன்ன கருத்தும் முடிந்தாகிவிட்டது. சுருக்கமாகச் சொல்லுங்கள், நான் புரிந்து கொண்டேன். முடியுங்கள் நான் பிறகு தீர்ப்பு சொல்லுகிறேன்.

THIRU J. JAMES ; I am clarifying the position. I do not explain all the rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக முடித்தால் நலம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: உங்கள் சுற்றறிக்கையில், நாங்கள் நோட்டீஸை சபாநாயகரிடம் கொடுக்கவேண்டும், அமைச்சரிடம் கொடுக்க வேண்டும், காரியதரிசியிடம் கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். அதோடு, காலை 8 1/2 மணிக்கு முன்னர் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால், ரூல் 43

செக்கரட்டரியிடம் 3 காப்பீஸ் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. காரியதரிசி ஒரு காப்பியை அமைச்சருக்கும் ஒரு காப்பியை ஸ்பீக்கருக்கும் கொடுப்பதற்கும் உதவியாக இருப்பதற்காகத்தான் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது. சபாநாயகருடைய செக்கரட்டேரியட்டில் இருக்கிற பொறுப்பை, அங்கத்தினருடைய தலையில் சுமத்தி, ரூல் 42-ன் கீழ் அட்ஜார்ன்மென்ட் மோஷன் வராமல் தடை செய்வதற்காக இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இது எங்களது உரிமையைப் பறிப்பதோடு, விதிமுறைகளுக்கு முரண்பாடாக இருக்கிற காரணத்தால் இந்தச் சுற்றறிக்கையை வித்டிரா செய்துவிட்டு, ஏற்கனவே விதிமுறைகளில் இருப்பதைச் செயல்படுத்துவது நல்லது.

திரு. க. சுப்பு: Just a word, Sir. Rule 242 is a saving clause. விட்டுப் போனவைகளை கன்சிடர் செய்வதற்காக வைத்திருக்கிற சேவிங் கிளாஸாக ரூல் 242 இருக்கிறது. அதற்கு பதிலாக, ரூல் 42 ஸ்பெஸிஃபிக்காக இருக்கிறது. என்ன என்ன காரணங்களால் அட்ஜார்ன்மென்ட் மோஷன் கொண்டுவரலாம் என்று இருக்கிறது. அதற்கு உட்பட்டு கொண்டு வந்தாலும், கன்சென்ட் கொடுப்பதில்லை, அனுமதி கொடுப்பதில்லை. விதிகளுக்குப் புறம்பாகக் கூட அனுமதி மறுக்கப்படுகிறது. அப்படிமறுக்கப்படும் பொழுதுகூட, அவற்றை இங்கே எழுப்ப அனுமதி கொடுப்பதில்லை. அந்த உரிமைகூட மறுக்கப்படுகிறது. சட்ட விரோதமாக நீங்கள் தள்ளியது தவறு என்ற நிலைமையிருந்தும் கூட, அவற்றைச் சுட்டிக் காட்ட முடியாமல் நாங்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். சட்ட மன்றத்தில் ரூல்ஸ் கமிட்டிக்கு புரவிஷன் இருக்கிறது. டெலிகேட்டட் லெஜிஸ்லேஷன் இருக்கிறது. Rule 242 is not a overriding clause. ரூல் 242, ஓவர்ரைட் பண்ண முடியாது. ரூல்ஸ் கமிட்டிதான் எதையும் மாற்ற வேண்டும். ஆகவே, இது விதிகளுக்கும் புறம்பானது, எங்களுடைய உரிமையையும் பறிக்கிறது. அந்த அறிக்கையை விட்டது எங்களது உரிமையைப் பறிக்கிறது. செயலாளர் பலரிடத்திலே பேசினர். இருந்தாலும் நாங்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. விதிமுறைகளை சர்க்கம்வென்ட் பண்ணுகிற மாதிரி இருக்கிறது ஆகவே அதை வித்டிரா பண்ணவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேற்று கொடுத்தது, நடைமுறையிலே இருக்கிற சிக்கல்களுக்காக ஒரு டைரக்ஷன்ஸ் கொடுக்கிற முறையிலே இருக்கிறது. நான் இருப்பதை வைத்துப் பேசுகிறேன். From time to time direct என்று Rule 242 இருக்கிறது. இதிலே, ஸ்பெஸிஃபிக்காக நீங்கள் 8-59-க்கு அட்ஜார்ன்மென்ட் மோஷன்ஸ் கொடுக்கலாம் என்றிருக்கிறது. காலை 8-59 மணிக்கு திரு. சுப்பு அட்ஜார்ன்மென்ட் மோஷன் கொண்டு வந்து தரலாம். 9-30 மணிக்குக் கேள்வி நேரம் முடிந்தவுடனே, திரு. சுப்பு அது பற்றிக் கேட்கலாம். தகவலைச் சேகரித்துக் கொடுக்கவோ, முழுமையாகச் சேகரிக்கவோ, சங்கடங்கள் இருக்கின்றன என்பதற்காகத்தான் இவ்வாறு சொல்லப்பட்டது. ரூல்ஸ் கமிட்டி

1977 ஜூலை 29] [பேரவைத் தலைவர்]

அமைத்து, விதிகளை திருத்தவோ, மாற்றவோ செய்யலாம். அது விதிகள் குழுவைப் பொறுத்தது. அதுவரையில் டைரக்ஷனாக வைத்தேனே தவிர, சட்டத்தைக் குலைக்கவோ, திருத்தவோ, நானே அதிகாரம் பெற்றவனாக இல்லை. எனக்கு இருக்கிற சங்கடம் 8-45, 8-50, 8-59-க்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் தருகிறபொழுது, சுற்று அனுப்பி, தகவல் சேகரிக்கமுடியவில்லையே என்பதுதான். எதிர்க் கட்சித் தலைவர் நேற்று பேசியபொழுது கூட, 8·30 மணிக்கு உங்களால் தர முடியாவிட்டால், மறுநாளைக்கு அவைத் தலைவர் கொண்டுவருவது கூட நல்லது என்று சொன்னார். அப்படிப்பட்ட கருத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். நான் சொன்னது, 1/2 மணி நேரம் முன்னதாகக் கொடுத்தால், அன்றைக்கே எடுத்துக் கொள்ளலாம் என்பதுதான். 1/2 மணி நேரம் முன்னதாகக் கொடுக்க முடியுமா என்ற சிக்கல் எழுந்த பொழுது, எதிர்க் கட்சித் தலைவர் தாராளமாக சங்கடம் இல்லாமல் செய்யச் சொன்னார். அந்த அடிப்படையிலே சொன்னேனே தவிர, Rule 242-லே from time to time direct என்றிருக்கிறது. அந்த அடிப்படையிலே வைத்து செய்ததே தவிர, சங்கடங்களை நிவர்த்தி செய்ய, எனக்குள்ள சிக்கலை நிவர்த்தி செய்யத்தான் 1/2 மணிக்கு முன்னால் தாருங்கள் என்று சொன்னேனே தவிர, சட்டத்திற்குப் புறம்பாகவோ, சட்டத்திற்கு மாறாகவோ செய்ய வில்லை. நீங்கள் எனக்கும் ஒத்துழைப்புத் தாருங்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 9-40.)

திரு. க. சுப்பு: எனக்கு ஒரு சங்கடம். 3 காப்பிகள் கொடுக்க வேண்டும். அமைச்சரிடத்திலே ஒரு காப்பி கொடுப்பதிலே தான் எல்லா கஷ்டமும் இருக்கிறது. அமைச்சரைப் பார்க்கப் போனால்— உங்களுக்குத் தெரியும். நான் முதல் அமைச்சரைப் பார்க்கப் போனால் அடிக்க வந்தார் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி திரும்பவும் ஆரம்பிக்கிறீர்களே. பொறுப்புள்ள உறுப்பினர் ஒரு தடவை நான் விளக்கம் சொன்ன பிறகு எழுப்பவேண்டாம். நான் பெருந் தன்மையோடு அவையைக் கேட்டேன்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற அளவுக்கு, 8 1/2 மணி என்பதை வற்புறுத்தாமல், வலியுறுத்தாமல் ரூல்ஸ் கமிட்டிக்கு விட்டு அதன் மூலம் ஒரு தெளிவான விதிமுறைகளை உருவாக்கினால் சரியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே விதி 242 ஐ படித்தீர்கள்... It says :—

"All matters not specially provided for in these rules and all questions relating to the detailed working of these rules unless shall be regulated in such manner as the Speaker may from time to time direct."

என்று போடப்பட்டிருக்கிறது. அதை வைத்து செய்ததே தவிர நீங்கள்—அவையிலே—வேண்டாம் என்று சொன்னால். தேவை இல்லை என்றால் நான் மறுநாள் கொண்டு வந்து விடுகிறேன்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும். வேண்டாமென்று மறுக்கவில்லை. ரூல்ஸ் கமிட்டிக்கு விடலாம், நீங்கள் நேற்றைய தினம் அதைத் தெரிவித்து இருக்கிறீர்கள். அதைப் போல—செய்தால் சிக்கல் இருக்காது, சிரமம் இருக்காது. உங்களுக்கும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒப்புதலைத் தந்திருக்கும்போது என்னுடைய சங்கடங்களைச் சொன்னேனே தவிர, தேவை இல்லை என்று நீங்கள் சொன்னால் நான் ரூல்ஸ் கமிட்டிக்கே விட்டுவிடுகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே எழுப்பிய பிரச்சினை இதைவிட சற்று மாறுபட்ட ஒன்று. தாங்கள் இந்த அவையிலே பேசியபோது சில நடைமுறை மாற்றங்களுக்கு ஒப்புக் கொண்டீர்கள். அந்த ஒப்புக் கொண்ட மாற்றம் இடம் பெறாமல், முதலிலே படித்த அறிக்கையே சுற்றறிக்கையாக வருகிறது. பின்னர் தெரிவிக்கப்பட்ட கருத்து இடம் பெறாமல் முன்னாலே சொன்னவை இடம் பெற்று வருகிற அளவுக்கு கவனிக்க முடியவில்லையா? நீங்கள் ஒப்புக்கொண்ட கருத்துக்கள் வராமல் முதலிலே படித்த அறிக்கை மட்டும் வெளி வரலாமா? அப்படி வரும்போது நீங்கள் ஏற்றுக் கொண்ட கருத்துக்கு மாறுபாடாக இது வந்திருக்கவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று நீங்கள் சொன்ன கருத்துக்கு வாதப் பிரதிவாதம் நடந்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் யோசனை சொன்னார்கள். அவையிலே ஏற்றுக் கொள்ளலாம். நீங்கள் சரி என்று சொன்னால் என்பதுசொன்ன கருத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவையிலே இப்படி ஒரு சங்கடத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. ஆகவே நீங்கள் ஒத்துழையுங்கள் என்று சொன்னேனே தவிர எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் .ரொம்பத் தாராளமாக ஒரு நாள் டைம் கொடுக்கிறார்கள். அதுவே தாராளம் ஆயிற்றே 8 1/2 மணிக்கு முன்னாலே கொடுக்கவேண்டுமென்று படித்தததுதான் சுற்றறிக்கையாக வந்திருக்கிறதே தவிர, பேசியவைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் இந்த சுற்றறிக்கை அப்படி வந்திருக்காது. இப்போது நீங்கள் அத்தனை பேரும் சொன்னதை ஏற்று, விதி அமைக்கும் குழு என்றைக்கு சொல்லுகிறதோ, அதுவரையில் நடைமுறையில் நடக்கிறபடி நடக்கட்டும்.

1977 ஜூலை 28]

திரு. எம். ஏ. லத்தீப்: பாயின்ட்-ஆப்-ஆர்டர். அமைச்சர் அவையிலே இருக்கிற ஒவ்வொரு அமைச்சருக்கும் தனிப் பொறுப்பும் உண்டு. கூட்டுப் பொறுப்பும் உண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசாங்கத்தின் சார்பாக, கூட்டுப்பொறுப்பினை வலியுறுத்தும் வகையில் அரசு முடிவெடுக்கும் என்று சொல்வது சபையின் மரபு. ஆனல் ஒரு சில அமைச்சர்கள், முதலமைச்சர் முடிவெடுப்பார் என்று சொல்வது ஏதோ இவர்களுக்குக் கூட்டுப் பொறுப்பில்லாதது போல இருக்கிறது. இது மரபுக்கு ஒத்து வராதது என்பதால் இதைப் பற்றி தாங்கள் தீர்ப்பு சொல்ல வேண்டும். அரசாங்கம் முடிவு எடுக்கும் என்று ஒவ்வொரு அமைச்சரும் சொல்வது தான் மரபு. ஆனல் தொழிலாளர் நல அமைச்சர், முதலமைச்சர் முடிவெடுப்பார் என்று சொன்னர்கள்.

It is not in good taste. It is not according to the convention because every Minister is jointly and severally responsible. Every Minister speaks for him and his Department.

மாண்புமிகு பேரவை தலைவர்: தொழிலாளர் நல அமைச்சர் முதலமைச்சர் என்று சொன்னதே எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பில் ஏற்றுச் சொல்கிருர். ஆகவே அதைப் பெரிதுபடுத்த வேண்டாம்.

(4) 1977–78-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே: 1977–78-ம் ஆண்டுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மன்றத்தின் ஒப்புதலுக்கு நிதி நிலை அறிக்கையைக் கொண்டு வந்து இருக்கிருர்கள். இதன் மீது என் கருத்தினைத் தெரிவிப்பதற்கு முன்பு, மீண்டும் நான் வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன், காழ்ப்பு உணர்ச்சிக்கு அப்பால் நின்று இந்த நிதி நிலை அறிக்கையினை ஆராய்ந்துதான் நான் பேசுகிறேனே தவிர வேறு அல்ல என்பதை வலியுறுத்திக் கூறி என் உரையினை நான் துவக்குகிறேன்.

இரண்டு, மூன்று நாட்களாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்து கொண்டிருக்கிறது. அந்தச் செய்தியினைப் பற்றி இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர நான் முயற்சித்தேன். முடியவில்லை. ஆனல் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தச் செய்தியினை நான் வலியுறுத்துவது என்னுடைய கடமை என்று கருதி நான் அதை முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன். காவிரி நீர்ப் பிரச்சனை பற்றியது தான் அது. காவிரி நீர் பிரச்னையைப் பற்றி இன்று கூட பத்திரிக்கையில் வந்திருக்கிறது. கிருஷ்ணராஜசாகருக்குள் 50 ஆயிரம் கியூ செக்ஸ், தண்ணீர் உள்ளே வருவதாகவும், ஆனல் அதிலிருந்து வெளியே அனுப்பப்படுகிற தண்ணீர் ஆயிரம் கியூ செக்ஸ் தண்ணீர்தான் என்றும், இந்த அளவுக்குத்தான் திறந்து விடப்படுகிறது என்றும், தெளிவாக இன்றைய தினமும், நேற்றும், இரண்டு நாட்களுக்கு முன்பும் பத்திரிகையில் செய்தி